**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 513/2021**
**வழக்கு சாட்சி PW-6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியம்மாள் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகையா | தொழில் | : | கணக்கர் |
| கிராமம் | : | கடப்பாகத்தி | வயது | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் கடப்பாகத்தியில் குடியிருந்து வருகிறேன். நான் ஜெயபால் என்பவருக்கு சொந்தமான கடப்பாகத்தியில் உள்ள சாமில்லில் கணக்கராக வேலை செய்து வருகிறேன். நான் தினமும் வழக்கமாக காலை 09.00 மணிக்கு அலுவலகம் சென்று விடுவேன். கடந்த 07.09.2020ம் தேதி, காலை 09.00 மணிக்கு சாமில்லில் வேலைக்கு வந்தேன். அப்போது, எனது முதலாளி ஜெயபாலும், அவரது மகன் சரவணக்குருவும் கடைக்கு வந்து விட்டு கோவில்பட்டியிலுள்ள மற்றொரு சாமில்லுக்கு சென்று விட்டார்கள்.

பின்னர், அன்றைய தினம் சுமார் 11.30 மணிக்கு எங்கள் சாமில்லுக்கு ஒரு போன் கால் வந்தது. நான் அதை அட்டன்ட் செய்து பேசிய போது, எதிர் தரப்பில் பேசிய நபர் ரமேஷ் என்றும், அவர் சாமில்லில் டிரைவர் வேலைக்காக முதலாளியை பார்க்க வேண்டும் என்று என்னிடம் கூறினார். நான் முதலாளி கோவில்பட்டி சென்று விட்டார்கள். ஆகவே, 2 நாட்கள் கழித்து பார்க்க வருமாறு கூறினேன். அன்றைய தினம் மாலை எனது

முதலாளி வீட்டில் கொள்ளை போன சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். அது குறித்து முதலாளியின் மனைவி தென்காசி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்ததாக தெரிந்து கொண்டேன்.

பின்னர், 10.10.2020 ம் தேதி, இந்த வழக்கின் எதிரிகளை போலீசார் கைது செய்த விபரம் தெரிந்து கொண்டேன். எதிரி ரமேஷ் என்பவர் கொள்ளையடிப்பதற்காக தான் என்னிடம் போன் செய்து முதலாளி சென்ற விபரம் தெரிந்து கொண்டு, அவர் இல்லை என்ற விபரம் தெரிந்து கொண்டு கொள்ளையடித்து சென்று விட்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரிய வந்தது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் சம்பவ காலக்கட்டத்தில் ப்ளஸ் டூ படித்திருந்தேன். நான் 5 வருடமாக அக்கவுண்டராக வேலை பார்த்தேன். யாராவது போன் பேசினால் முதலாளியிடம் தகவல் சொல்வேன். அன்றைய தினம் போன் வந்தது சம்பந்தமாக எனது முதலாளியிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு போன் செய்த ரமேஷ் என்பவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்று நான் கேட்கவில்லை. அவர் சொல்லவும் இல்லை. ரமேஷ் அதற்கு முன்னால் என்னிடம் போன் பேசியதில்லை. ரமேஷின் மொபைல் எண் நானோ, முதலாளியோ ட்ரேசவுட் செய்யவில்லை. நான் என்னுடைய முதலாளிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரமேஷ் எனக்கு போன் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:19:40 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 513/2021**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இராமைய்யா | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | காளப்பெருமாள் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆஷாத்நகர் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 19th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ஆஷாத்நகரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய வீட்டில் சி.சி.டி.வி கேமரா பொருத்தப்பட்டுள்ளது. 13.09.2020 அன்று ஒரு களவு கேஸ் விசாரிப்பதற்காக தென்காசி போலீசார் வந்து என்னுடைய வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளை பார்வையிட கேட்டார். அதில் சந்தேகப்படும்படியான நபர்கள் இருசக்கரவாகனத்தில் செல்வது கேமராவில் பதிவாகியிருந்தது. அதை போலீசார் அழைத்து வந்த டெக்னீசியன் உதவியுடன் சீ.டி யில் copy செய்ய கேட்டார்கள். நானும் அதற்கு சம்பந்தம் தெரிவித்தேன். பின்னர், போலீசார் சி.டியில் copy செய்து சென்று விட்டார்கள். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் 4 நபர்கள் வந்தார்கள். காலை 09.00 –09.30 மணியளவில் வந்தார்கள். எத்தனை மணிக்கு வீட்டை விட்டு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் பதிவுகளை எடுத்தபோது நான்

உடனிருக்கவில்லை. சந்தேகப்படும் பதிவுகளை நான் பார்த்தேனா? என்றால் பார்த்தேன். இருசக்கரத்தின் முன்னால் இருந்த நபர் ெஹல்மெட்டும், பின்னால் இருந்த நபர் பர்தாவும் போட்டிருந்தார். நான் அவர்களின் உருவம், முகம் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் அ.சா.1 க்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.19 19:19:46 +0530